# பாக்யராஜ் - ஈடு இணையற்ற கலைஞன்!



பதினேழே நாட்களில்
இன்னோர் இடியா?

பாரதிராஜாவைப் புதைத்த
மண்ணின் ஈரம்
இன்னும் காயவில்லை;
அதற்குள் பாக்யராஜுக்குத்
தீ மூட்டுவதா?

என்ன கொடுமை இது!

பாக்யராஜ்
ஈடு இணையற்ற கலைஞன்!

அவிழ்க்க முடியாத முடிச்சுகளைத்
திரைக்கதையில் இட்டு
அதைத் தான்மட்டுமே
அவிழ்க்கத் தெரிந்தவர்!

அவர் உருவம்
குறையென்று கருதப்பட்டது;
அதிலும் வென்றார்

அவர் குரல்
குறையென்று கருதப்பட்டது;
அதிலும் வென்றார்!

நகைச்சுவைக்கென்று
அவர் தனித்தடம் தயாரிப்பதில்லை;

கண்ணின் பாகமான இமைபோல
திரைக்கதையில் நகைச்சுவையை
இழைத்து விடுவார்!

80களில்
தமிழ் சினிமாவை நோக்கிவந்த
ஒவ்வொரு கிராமத்து இளைஞனுக்கும்
நம்பிக்கை கொடுத்தவர்
பாக்யராஜ்!

எம்.ஜி.ஆர். அவரைத்
தன் வாரிசு என்றார்!

பாக்யராஜின்
எதிர்பாராத மறைவு
கலையுலகை அதிரவைக்கிறது!

வாழ்ந்திருக்க வேண்டிய
கலைஞன் அய்யா நீ!

பாதியில்
பயணப்பட்டு விட்டாயே!

உன் உயிர்
அமைதி அடைக!

ஆழ்ந்த இரங்கல்
அனைவருக்கும்!



**கவிப்பேரரசு**
**வைரமுத்து**

## இயக்குநர் பாக்யராஜ் மறைவு!

# சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 29- இயக்குநர் பாக்யராஜின் மறைவுச் செய்தியறிந்து அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி, சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்தி வருமாறு:-

தமிழ்த்திரையுலகின் முன்னணி இயக்குநராக திகழ்ந்த பாக்யராஜ் சார் மறைவுற்ற செய்தியறிந்து வருந்தினேன். வள்ளுவர் கோட்டம் அருகேயுள்ள பாக்கியராஜ் சாரின் இல்லம் சென்று அவரது திருவுடலுக்கு மாலை வைத்து மரியாதைச் செலுத்தினோம். திரைக்கதை மன்னன் என்று போற்றப்பட்டவர். எழுத்தாளர் - பத்திரிகையாளர் - நடிகர் தயாரிப்பாளர் பாடலாசிரியர் இசை அமைப்பாளர் என பன்முகத் திறமையோடு தனி முத்திரைப் பதித்தவர்.



அண்மையில் மறைந்த பாரதிராஜா சாரின் பட்டறையில் இருந்து வந்த அவர், தனது எழுத்தாற்றல் மூலம், குடும்ப உணர்வுகள் சார்ந்த கதைகளை நகைச்சுவையாகவும் - ஜனரஞ்சகமாகவும் காட்சிப்படுத்தினார். எண்ணற்ற அடுத்தத் தலைமுறை படைப்பாளிகளை உருவாக்கிய பெருமையும் பாக்யராஜ் சாரை சேரும். திரையுலகில் 50 ஆண்டுகளை நிறைவு செய்ததற்காக அவருக்கு சமீபத்தில் எடுக்கப்பட்ட விழாவில் பங்கேற்று, கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பாக்யராஜ் சாரின் பெருமைகளைப் பேசினார்கள்.

பாக்யராஜ் சாரை இழந்து வாடும் அவரது துணைவியார் திருமதி.பூர்ணிமா பாக்யராஜ், சகோதரர் சாந்தனு, சகோதரி சரண்யா உள்ளிட்ட அவரது குடும்பத்தாருக்கும், அவருடைய ரசிகர்கள், நண்பர்கள், நலம்விரும்பிகள் அனைவருக்கும் என்னுடைய ஆறுதலையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்த்திரையுலகம் உள்ள வரை பாக்யராஜ் சாரின் புகழ் நிலைத்திருக்கும்.

இவ்வாறு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## சமூக நீதியின் தாய்மடியாகத் திகழும் தமிழ்நாட்டை

# சமூக அநீதிக்கான தளமாக மாற்றுவதுதான் மாற்றமா முதல்வரே?

## தி.மு.கழக ஐ.டி.விங் கேள்வி!

சென்னை, ஜூன் 29- சட்டமன்றத்தை 'சத்த'மன்றமாக்கி, சமூக நீதி என்று ஹைடெசிபிளில் குரல் கொடுத்த முதல்வர் விஜய்யின் உத்தரவின் பேரில், பள்ளி மாணவர்களுக்கு சாதி அடையாளத்துடன் ஐ.டி. கார்டு வழங்கப்படும் என த.வெ.க அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்திருக்கிறார். அதாவது, தமிழ்நாட்டில் இனி ஒவ்வொரு மாணவமாணவியரும் தங்கள் சாதி அடையாளத்தைக் கழுத்தில் தொங்க விட்டுக்கொள்ளப் போகும் அவலத்தை உருவாக்க நினைக்கிறது த.வெ.க. அரசு.

காலம் காலமாக கல்வி மறுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களுக்கு, எவ்விதத் தடையுமின்றி, உரிய முறையில் கல்வி கிடைக்க வேண்டும் என்பதுதான் சமூக நீதி. அதனால்தான், இட ஒதுக்கீடு அடிப்படையில் பள்ளிகளில் சாதிச் சான்றிதழ் தேவைப்படுகிறது. அது, கல்வி வாய்ப்பைப் பெறுவதற்காகத்தானே தவிர, கழுத்தில் தொங்க விட்டுக் கொள்வதற்கான பெருமித அடையாளமல்ல.

ஒரு மாணவர் எந்தப் பள்ளியில் படிக்கிறார், அவர் பெயர் என்ன, எந்த வகுப்பில் படிக்கிறார், அவருக்கானத் தொடர்பு எண் என்ன, அவசரத் தேவைக்காக அவருடைய ரத்தவகை என்ன என்பன போன்றவைதான் ஐ.டி.கார்டில் இருக்க வேண்டும். இந்த மாணவன் இன்ன சாதி, அந்த மாணவன் இன்ன சாதி என்று கழுத்தில் தொங்க விட்டுக் கொள்ளும் போக்கு, மாணவ சமுதாயத்திடம் பிரிவினையையும் மோதலையும்தான் உண்டாக்கும். சாதி அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையிலான எந்த ஒரு அடையாளமும் சமூக நீதிக்கு எதிரானது.

முதல்வர் விஜய் உத்தரவில் இதைச் செய்யப் போகிறோம் என்கிறார் அமைச்சர். இதற்கும் விஜய் வாய் திறக்க மாட்டார். சமூக நீதியின் தாய்மடியாகத் திகழும் தமிழ்நாட்டை சமூக அநீதிக்கானத் தளமாக மாற்றுவதுதான் மாற்றமா முதல்வரே?

இவ்வாறு தி.மு.கழக ஐ.டி.விங் தெரிவித்துள்ளது.

# ராணுவ வீரர் சுடலைமணி வீர மரணம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. நேரில் அஞ்சலி!

தூத்துக்குடி,ஜூன்.29- தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கே.பி.தளவாய்புரம் கிராமத்தைச் சேர்ந்த இராணுவ வீரர் சுடலைமணி அவர்கள் அஸ்ஸாம் மாநிலத்தில் வீர மரணம் அடைந்துள்ளார். அவரது உடல் 27/06/2026 சனிக்கிழமை தூத்துக்குடி மாவட்டம், கூட்டுடன்காடு கிராமத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி நேரில் சென்று அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

அஸ்ஸாம் மாநிலத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது, வீரர் சுடலைமணி வீர மரணமடைந்தார். இவரின் மறைவுச் செய்தி மேலக்கூட்டுடன்காடு மற்றும் தளவாய்புரம் பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. வீர மரணமடைந்த சுடலைமணியின் உடலை விமானம் மூலம் சொந்த ஊருக்குக் கொண்டு வரப்பட்டது. அவரின் உடல் ராணுவ மரியாதையுடன் இறுதிச்சடங்கு நடைபெற்றது.



## த.வெ.க. அரசின் திட்டத்துக்கு எதிர்ப்பு வலுக்கிறது:

# மாணவர் அடையாள அட்டையில் சாதி விவரங்களை இணைப்பதா?

## ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!

சென்னை, ஜூன் 29- ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. விடுத்துள்ள கண்டன அறிக்கை வருமாறு:-

தமிழக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள புதிய ஸ்மார்ட் அடையாள அட்டைகளில் சாதிச் சான்றிதழ் விவரங்களை இணைக்கும் திட்டம் தொடர்பான அறிவிப்பு, மாநிலம் முழுவதும் விவாதத்தையும் எதிர்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

கோபிசெட்டிபாளையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன், மாணவர்கள் ஆண்டுதோறும் வருமானம், இருப்பிடம் மற்றும் சாதிச் சான்றிதழ்களைப் பெற அலுவலகங்களுக்கு அலைவதைத் தவிர்க்கும் நோக்கில் புதிய ஸ்மார்ட் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

முதல்கட்டமாக 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த அட்டைகளில் மாணவர்களின் தனிப்பட்ட விவரங்களுடன் சாதிச் சான்றிதழ் தொடர்பான தகவல்களும் டிஜிட்டல் முறையில் இணைக்கப்படவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து, கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் கவலை தெரிவித்துள்ளன. கல்வி உதவித்தொகை மற்றும் இடஒதுக்கீடு உள்ளிட்ட நலத்திட்டங்களுக்காக சாதி விவரங்கள் அரசின் தரவுத்தளங்களில் பராமரிக்கப்படுவது அவசியமாக இருந்தாலும், அவற்றை மாணவர் அடையாள அட்டைகளுடன் இணைப்பது சமூக ரீதியாக பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே. பிரகாஷ், "கல்விச் சலுகைகள் மற்றும் அரசு நலத்திட்டங்களுக்காக சாதி விவரங்கள் தேவைப்படலாம். ஆனால், அவற்றை மாணவர்களின் அடையாள அட்டையுடன் இணைப்பது தேவையற்ற சமூக அடையாளப்படுத்தலுக்கு வழிவகுக்கும். பள்ளிகள் சமத்துவத்தையும் ஒற்றுமையையும் கற்றுத்தரும் இடங்களாக இருக்க வேண்டும்" என்றார்.



மேலும், மாணவர்களிடையே பாகுபாடு, உளவியல் அழுத்தம் மற்றும் சமூகப் பிரிவினை உணர்வுகள் உருவாகும் அபாயம் இருப்பதாக கல்வியாளர்கள் எச்சரித்துள்ளனர். ஏற்கனவே பள்ளிகளில் சாதி அடையாளங்களை வெளிப்படுத்தும் நடைமுறைகளைத் தவிர்க்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், இந்த திட்டம் அதற்கு முரணானதாக அமையக்கூடும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நீதியரசர் சந்துரு குழுவின் பரிந்துரைகள், பள்ளி மற்றும் கல்வி நிறுவனங்களில் சாதி அடையாளங்களை குறைக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்ததாகவும், தற்போதைய திட்டம் அந்த நோக்கத்துடன் பொருந்துகிறதா என்பது குறித்து அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையில், திட்டத்தின் முழுமையான வழிகாட்டு நெறிமுறைகள் இன்னும் வெளியிடப்படாத நிலையில், அடையாள அட்டைகளில் சாதி விவரங்கள் எவ்வாறு இடம் பெறும் என்பது குறித்தும் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.


நிர்வாக வசதிக்காக மாணவர் தகவல்களை டிஜிட்டல் முறையில் ஒருங்கிணைப்பதில் தவறில்லை என்றாலும், சமூக நல்லிணக்கத்தை பாதிக்காத வகையில் திட்டத்தை செயல்படுத்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதே கல்வியாளர்கள் மற்றும் சமூக அமைப்புகளின் கோரிக்கையாக உள்ளது.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

## ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி வர்த்தக அணி துணை அமைப்பாளர்

# கே.செல்வம் - கே.ராஜசேகர் தந்தை அ.கண்ணன் மறைவு!

### நே.சிற்றரசு – மா.பா.அன்புதுரை – கோ.யுவராஜ் – மல்லிகா யுவராஜ் அஞ்சலி!




சென்னை, ஜூன். 29 - சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி வர்த்தக அணி துணை அமைப்பாளர் கே.செல்வம், 118 வது வட்டக் கழகச் செயல்வீரர் கே.ராஜசேகர் ஆகியோரின் தந்தையும், தி.மு.கழக மூத்த முன்னோடி ஏ.கே.போர்வெல் உரிமையாளர் அ.கண்ணன் (வயது 83) அவர்கள் 26.06.2026 - வெள்ளிக்கிழமை அன்று காலை 10 மணியளவில், உடல்நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் மா.பா. அன்புதுரை, 118 வது வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ், 118 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மல்லிகா யுவராஜ், சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துபாய் விஜய், பொதுக்குழு உறுப்பினர் ஜே.நற்குணநாதன், எஸ்.எம்.கே.ராமன், ம. ஜெயக்குமார், ப. வினோத்குமார், சாந்தி பரந்தாமன், கி.தியாகராஜன், ம.வேலுமணி, எஸ்.ரமேஷ், டி.பிரபா, எஸ்.செந்தில், எம்.காசி, கே.கோதா, ஏ.வி.இராமநாதன், போட்டோ சுரேஷ், கே.பி. ஜெயராமன், எஸ்.பாஸ்கர், ஜி.சம்பத்குமார், பி.திருத்தணி, எஸ்.சேகர், டி.ஜான்சன், கோ.தீபன் சக்கரவர்த்தி, அனந்த, கிருஷ்ணன், பரத், சீனிவாசன் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அன்னாரின் உடலுக்கு மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று முன்தினம் (27.06.2026 - சனிக்கிழமை) காலை 10.30 மணிக்கு, எண். 43/66, அம்மையப்பன் தெரு, இராயப்பேட்டையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு மயிலாப்பூர் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ந.உ. சிவசாமி
### ஜூன் 29 (2023)



இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

மாவட்ட பிரதிநிதியாகவும் – முப்பது ஆண்டுகள் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் – பத்தாண்டுகள் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து முத்துப்பேட்டை பகுதியில் கழகம் வளர்த்தவர்.

ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர், மாவட்ட வேளாண்மை விற்பனை குழு உறுப்பினர், பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர், எடையூர் சங்கந்தி கூட்டுறவு சங்க தலைவர் என பல்வேறு அமைப்புகளில் பொறுப்பு வகித்தவர். பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**